
https://tamileelamarchive.com/

# நமது பொருளாதாரம்



https://tamileelamarchive.com/

# நமது
# பொருளாதாரம்

முதலாம் பதிப்பு
மார்கழி 1985

ROOT

தமிழீழ ஆய்வு நிறுவனம்
தமிழீழ விடுதலைப் புலிகள்

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை முனைப்புடன் நெறிப்படுத்தி முன்னெடுக்க தமிழீழ விடுதலைப் புலிகளினால் அமைக்கப்பட்ட பல ஸ்தாபனங்களில் தமிழீழ ஆய்வு நிறுவனமும் ஒன்று. போராட்டக் காலத்திலும் அதற்கடுத்த நிர்மாணக்கால கட்டத்திலும் எழக்கூடிய பொருளாதார நெருக்கடிகளை வென்று திட்டமிட்ட அடிப்படையில் எமது பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஆய்வு செய்து அமுல் படுத்துவது இந் நிறுவனத்தின் கடமை. தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் மேலும் முனைப்படையும் போது ஏற்படக்கூடிய நெருக்கடிகளைக் கருத்தில் கொண்டு போராட்டத்தைப் பாதுகாப்பதற்காக எம்மால் நடைமுறைப் படுத்தப்படுகின்ற **''நெருக்கடி காலப் பொருளாதாரத் திட்டத்தை''** இங்கு தருகின்றோம். இத் திட்டத்தை மேலும் செழுமைப் படுத்தக்கூடிய ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன

# நமது பொருளாதாரம்

நடைமுறைப் பொருளாதாரப் பிரச்சினையையும், போராட்டம் மேலும் வலுவடைந்து செல்லும் போது ஏற்படக் கூடிய பிரச்சினையையும் கருத்தில் கொண்டு ஓர் திட்டமிட்ட பொருளாதார அமைப்பை உருவாக்குதல் அவசியமாகும். விடுதலையின் பின் தமிழீழத்தின் பொருளாதார அபிவிருத்தியை இலகுவாக்கும் வகையில் அடித்தளங்களை இடக்கூடியதாகவும் இன்றைய எமது திட்டங்கள் அமைக்கப்படுவது சிறந்ததாகும். அத்துடன் இப்பிரச்சினைகளிற்கான தீர்வுகள் மக்களை எல்லா வகையிலும் ஏற்றத்தாழ்வு அற்றவர்களாகவும், உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைப் பெறுபவர்களாகவும் மாற்றுகின்ற நடவடிக்கை களாக இருத்தல் வேண்டும்.

கீழே கொடுக்கப்படும் பொருளாதாரத் திட்டங்கள் தமிழீழத்தைப் பெறுவதற்கான எமது போராட்டத்தின் ஒரு பிரிவாக அமையும். எம்மால் ஆரம்பித்து நடைமுறைப்படுத் தப்படும், ஆரம்பிக்கப்பட இருக்கும் பொருளாதார நடவடிக் கைகள் எமது இறுதி இலட்சியத்தை நோக்காகக் கொண்ட வையே. எனவே தமிழீத்தின் ஒவ்வொரு பிரஜையும் பொரு ளாதார முயற்சிகளின் வெற்றிக்காகத் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளுதல் தனது பிரதான கடமை என்பதை உணருதல்

https://tamileelamarchive.com/



வேண்டும். எமது பொருளாதாரத் திட்டமிடல் ஒவ்வொரு மனிதனின் பங்கையும் முக்கியத்துவப்படுத்துவதாக அமைய அதே வேளை ஒவ்வொரு மனிதனதும் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதாகவும் அமைதல் வேண்டும்.

தமிழீழத்தின் பொருளாதார அபிவிருத்தியை நோக்காகக் கொண்டிருக்கும் நாம், எமது போராட்டம் மேலும் வலுவடையும் போது ஏற்படும் நெருக்கடியான கால கட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளிலேயே உடனடிக் கவனம் செலுத்துதல்வேண்டும். நெருக்கடியான காலகட்டத்தில் பட்டினி, நோய் என்பவற்றிலிருந்து எமது மக்களைப் பாதுகாத்துக் கொள்வதை முக்கிய நோக்கமாகக் கொண்டதாகவே எமது திட்டங்கள் இருத்தல் வேண்டும்.

தமிழீழத்திற்கு வெளியிலிருந்து இறக்குமதியாகும் உணவு எரிபொருள், மின்சக்தி முதலிய அத்தியாவசிய பொருட்கள் ஒரு நிலையில் நிறுத்தப்படலாம். அந்நிலையிலும் எமது மக்களது வாழ்வு பாதிக்கப்படாதவாறு நாம் பிழைத்து இருப்பதற்குத் தேவையான அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வழிவகைகளை இப்போதிருந்தே ஆய்வு செய்து நடைமுறைப்படுத்த வேண்டியது எம் எல்லோரதும் முக்கிய பொறுப்பு ஆகும்.

தமிழீழம் முழுமையையும் எடுத்து நோக்குவோமானல் அங்கு உற்பத்தியாகும் உணவு எமக்கு போதுமானதாகும். மேலும் அரிசி, மீன், சில மரக்கறிகள் போன்றவை எமது தேவைக்கும் மேலதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனலும் நெருக்கடி காலத்தில் போக்குவரத்து வசதிகள் சீர்குலையுமாதலால் தமிழீழத்தின் ஒரு பகுதியில் ஒரு பொருள் மேலதிகமாக இருக்கும் அதே வேளை இன்னேர் பகுதியில் அதே பொருள் பற்றாக் குறையாக இருக்கும் நிலையேற்படும். எனவே தமிழீழத்தின் ஒவ்வொரு சிறுபிராந்தியமும் தன்னளவில் குறைந்த பட்ச தன்னிறைவையாவது அடையக் கூடியவாறு எமது திட்டங்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.



## குறிக்கோள்கள்

1. நெருக்கடியான கால கட்டத்தில் தமிழீழத்தின் ஒவ்வொரு பிரஜையும் தனது மிகக் குறைந்த தேவைகளையாவது பெற்றுக் கொள்வதை உறுதிப் படுத்தல்.
2. மக்களின் நுகர்வு மட்டத்தை உயர்த்துவதன் மூலன் சகல பிரஜைகளினதும் வாழ்க்கைத் தரத்தை மேம் படுத்துதல்.
3. உற்பத்திக்கான பொருளாதாரக் காரணிகளை முழுமையாகப் பயன்படுத்துதல்.
4. கிடைக்கக் கூடிய வளங்களை திறமையாக ஒழுங்கு படுத்துவதோடு மிகத் திறமையாகப் பயன்படுத்துதல்.

## குறிப்பாக

அ) நிலப்பயன்பாடு:- உயர்நிலம், தாழ்நிலம். தரிசு நிலம், குடியிருக்கும் நிலத்தின் ஒரு பகுதி.

ஆ) நிலக்கீழ் (கிணற்று) நீரையும், மழை நீரையும், குளத்து நீரையும் திறமையாகப் பயன்படுத்துதல்.

இ) கடல்வளப்பயன்பாடு:- மீன்பிடித் துறையை சிறந்த முறையில் விருத்தி செய்தல், கடல் தாவரங்கள் உயிரினங்கள் போன்றவற்றை முழுமையாகப் பயன்படுத்துதல்.

ஈ) பனை போன்ற நிரந்தரப் பயிர்களிலிருந்து நிறைந்த பயனைப் பெறுதல்.

உ) சுண்ணும்புக்கல், இல்மனைற், கண்ணாடி, மணல், களிமண் மற்றும் தாதுப் பொருட்களை அதிக அளவில் பெறுவதோடு கைத்தொழிற் துறைக்கான உள்ளீடாகப் பயன்படுத்துதல்.

https://tamileelamarchive.com/



ஊ) காற்று, சூரிய சக்தி, கடல் அலை, கடல் வெப்ப தட்ப நிலை போன்றவற்றைப் பயன்படுத்தி எமக்குத் தேவையான சக்தியைப் பெறுத.

5. கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, போன்ற அடிப்படை சேவைகள் சகலர்க்கும் கிடைப்பதற்கு வழியேற்படுத்தல்

6. விஞ்ஞான தொழில் நுட்பப் பயன்பாட்டுடன் விவசாயம், கைத்தொழில், சேவைத் துறை என்பவற்றை விருத்தி செய்தல்.

## குறிக்கோள்களை அடைவதற்குப் பயன்படுத்தப்பட வேண்டிய உள்ளீடுகளைப் பெறுவதற்கான வழிவகைகள்

1. மனித உழைப்பை உச்சமாகப் பயன்படுத்துவது. அதாவது மக்களிடமுள்ள திறமைகளை இனங்கண்டு தொழிற்பயிற்சியின் அடிப்படையில் பயன்படுத்துதல்.

2. நிலம், நீர், வெளிச்சம், காற்று, தாதுப்பொருட்கள், கடல்வளம் போன்ற வளங்களைப் பெறுதல், உச்சமாகப் பயன்படுத்துதல்.

3. விவசாயத்துறை, கைத்தொழில்துறை, வெளியீடு ஒவ்வொன்றும் வேறு தொழில்களின் உள்ளீடாகப் பயன்படுத்தப்படுதல்.

4. சக்தித் தேவையை நிறைவுசெய்வதற்கு எமக்குத் தாராளமாகக் கிடைக்கக்கூடிய காற்று, சூரியவெளிச்சம், மிருகக்கழிவு, கடல் வெப்ப வேறுபாடு, தாவர எரிபொருள் போன்றவற்றைப் பயன்படுத்துதல்.



5. கைத்தொழில், விவசாய துறைகள் பற்றிய விஞ்ஞான ஆராய்ச்சிகளை பல்கலைக்கழகங்கள், விவசாய கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவனங்கள் மேற்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்துவதோடு வெவ்வேறு துறைகளில் நிபுணத்துவம் உடையோரின் உதவிகளையும் ஆலோசனைகளையும் பெறுதல்.

## குறிக்கோள்களை அடைவதற்கு விருத்தி செய்ய வேண்டிய துறைகள்

### I விவசாயம்

பெரும்பாலும் வரண்ட பிரதேசத்தையே தாயகமாகக் கொண்டிருக்கும் நாம் எமது அடிப்படைத் தேவைகளில் முக்கியமான உணவுப்பொருளை திட்டமிட்ட அடிப்படையில் உற்பத்தி செய்தல் வேண்டும். விவசாயம் சார்ந்த எல்லா வளங்களையும் (மனிதவளம் உட்பட) உச்சமாகப் பயன்படுத்தும் வகையிலான திட்டமிடலே எமக்கு அவசியமானது.

விவசாயத்துறையை விருத்தி செய்யும் போது நாம் பின்வரும் முக்கிய நோக்கங்களை கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

அ) நெருக்கடியான காலகட்டத்தில் ஒவ்வொரு பிரஜையும் உயிர்வாழ்வதற்குத் தேவையான உணவைப் பெறுவதை உறுதிப்படுத்துதல்.

ஆ) கூடிய சத்துள்ள உணவுகள் கிடைப்பதை சாத்தியமாக்குதல்.

இ) இன்றைய நெருக்கடிகாலத்தைச் சமாளிக்கும் அதே வேளை எதிர்கால எம் சந்ததி உயர்வான வாழ்க்கைத் தரத்தைப் பெறக்கூடிய வழிமுறைகளை ஏற்படுத்தல்.

https://tamileelamarchive.com/



ஈ) விவசாய அபிவிருத்தியானது ஏனைய துறைகளையும் முன்னேற்றுவதாக அமைவதோடு ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு வகையில் பொருளாதார முன்னேற்றத்திற்கு தனது பங்களிப்பைச் செலுத்தக்கூடிய வசதிகளை ஏற்படுத்தல்.

எமது விவசாயத் திட்டங்கள் கூட்டுறவை வளர்ப்பதோடு எமது மண்ணுக்குரிய தானிய வகைகளைப் பன்மடங்காகப் பெருக்குதல், சிறிதுகாலம் களஞ்சியப்படுத்தக்கூடியதான தானிய வகைகளைப் பயிரிடுதல் (உ-ம் :- நெல், குரக்கன், சாமை, சோளம்), களஞ்சியப்படுத்தக்கூடிய கிழங்கினங்களை (குறிப்பாக சட்டிக்கரணை, இராசவள்ளி, பனங்கிழங்கு, மரவள்ளி, பீற்றூட், கரட், முள்ளங்கி போன்றவை) உற்பத்தி செய்தல், மரக்கறி வகைகளை பயிரிடலும் உற்பத்தியைப் பெருக்குதற்கான புதிய இனங்களை விருத்தி செய்தலும், எண்ணெய்த் தேவைக்காக சூரிய காந்தி, எள்ளு, நிலக்கடலை, ஆமணக்கு போன்றவற்றை பயிரிடுதல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதாக இருத்தல் வேண்டும். கைத்தொழிற் துறைக்குத் தேவையான உள்ளீடுகளைத் தரும் பயிர் வகைகளையும் பயிரிடுதல் அவசியமாகும். மிக இலகுவில் எமது பிரதேசத்திலிருந்தே பெருமளவில் உள்ளீடுகளைப் பெறக்கூடிய கைத்தொழில்களாக விவசாயம் சார்ந்த கைத்தொழில்களே இருக்கமுடியும். உதாரணமாக புடவை உற்பத்திக்கு பருத்தியும் சீனி உற்பத்திக்கு கரும்பு, பனை, பீற்றூட், போன்றவையும் விலங்குணவு உற்பத்திக்கு சோளம், தானியம் போன்றவையும் பால் உணவிற்கு ஆடு, மாடு மற்றும் சோயா போன்றவையும் பழரசம், ஜாம் போன்ற உற்பத்திகளிற்கு பப்பா, மா, பலா, தோடை போன்றவையும் அடிப்படையாக உள்ளன.

எம்மிடமுள்ள குறைந்தளவு நிலத்தையும், மிகக் குறைந்தளவு நீரையும் திறமையாகப் பயன்படுத்தி எமக்கு போதுமான அளவு உணவை உற்பத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு நாம் பயிரினங்களைத் தெரிவுசெய்தல் வேண்டும்.



இவ்வாறு பார்க்கும்போது விவசாயம் செய்யக்கூடிய எமது நிலங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

அ) **வீட்டைச் சுற்றியுள்ள எல்லை நிலம் :-** அனேகமாக ஒவ்வொரு வீட்டிலும் அவர்களிற்குத் தேவையான உப உணவு (மரக்கறி, கிழங்கு, பழவகை) முழுவதையும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக வீட்டுத் தோட்டங்கள் அமைக்கப்படுதல் வேண்டும். பப்பா, முருங்கை, அகத்தி, துவரை போன்ற நீண்டகாலத்திற்கு நின்று பலன் தரத் தக்க பயிர்களையும், பயிர் வளர்ப்புமுறை இலகுவான கத்தரி, வெண்டி, கீரை, பாகல், புடோல், பூசனி, இராசவள்ளி போன்ற பயிரினங்களையும் வீட்டுத் தோட்டங்களில் தெரிவு செய்தல் சிறந்ததாகும். ஓரளவு கூடிய நிலமுடையவர்கள் மரவள்ளி போன்றவற்றையும் பயிரிடுதல் உகந்தது. குறைந்த காலத்தில் பயன்தரத்தக்கதும் வீட்டிற்குள்ளேயே வளர்க்கக்கூடியதுமான காளான் உற்பத்தி வீட்டுத்தோட்டங்களில் மிக முக்கியமானதாகும்.

ஆ) **தோட்ட நிலம், மேட்டு நிலம் :-** ஓரளவு பெருந் தொகையில் பயிரிடக்கூடிய இந்நிலங்களில் பணப்பயிர்களாகிய புகையிலை, மிளகாய், வெங்காயம் போன்றவற்றைப் பயிரிடுவதைக் குறைத்து கூடுதலாக உணவுப்பயிர்களைப் பயிரிடுதல் வேண்டும். அரிசிக்குப் பதிலீடாகப் பயன்படுத்தக்கூடிய மரவள்ளி, இராசவள்ளி, உருளைக்கிழங்கு, சோளம், சோயா போன்றவை பயிரிடப்படுதல் அவசியமாகும். குறுகிய காலத்தில் கூடிய விளைவு தரக்கூடிய பயிர்வகைகளைத் தெரிவு செய்வது சிறந்ததாகும்.

இ) **வயல் நிலம் :-** நெல் பயிரிடும் போகங்கள் தவிர்ந்த ஏனைய காலங்களில் இந்நிலங்களை திறமை

https://tamileelamarchive.com/



யாகப் பயன்படுத்துதல் அவசியமாகும். குரக்கன், சாமை, வரகு, சோளம் போன்ற தானியங்களையும் பயறு, உழுந்து போன்ற உபஉணவுப் பயிர்களையும் எள்ளு, நிலக்கடலை போன்ற எண்ணெய்ப் பயிர்களையும் நிலத்திற்கும் நீர்ப்பாசன வசதிகளிற்கும் ஏற்றவாறு பயிரிடலாம். ஓரளவு நீர்ப்பாசன வசதியுடைய நிலங்களில் மரவள்ளி மற்றும் மரக்கறி வகைகள் கூட பயிரிடலாம்.

எமது பகுதியிலுள்ள அனைத்து நிலங்களும் முழுமையாகப் பயன்படுத்தப்படுதல் மிக அவசியமாகும். நிலவளம் குறைந்த எமது பகுதியில் ஓரங்குல நிலம் கூட பயன்படுத்தப்படாமலிருப்பது பொறுப்பாகும். நீர்ப்பாசன வசதியற்ற நிலங்களில் வரட்சியைத் தாங்கக் கூடிய பயிர்களும் கல் நிலம், உவர் நிலம், என்பனவற்றில் அந்நிலங்களிற்கேற்ற விறகு மரங்களும் பயிரிடப்படுதல் சிறந்ததாகும். காடுகள் இல்லாத விறகு தட்டுப்பாடு ஏற்படக் கூடிய மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் சவுக்கு, யூக்கிலிப்ரஸ் முதலிய மரங்களை பெருமளவில் நாட்டுதல் அவசியமானதாகும்.

## II மிருகவளர்ப்பு

நாம் வாழ்வதற்கு அவசியமான அடிப்படைத் தேவைகளில் முக்கியமான உணவைப் பெறுவதற்கு விவசாயத்தைப் போலவே மிருக வளர்ப்பும் முக்கியமானதாகும். மனிதர் உண்ணாத இலை, தழை, புல்லு, புண்ணாக்குப் போன்றவற்றைக் கொடுத்து புரதச் சத்து மிக்க இறைச்சியையும், குழந்தைகளிற்கு அவசியமான பாலுணவையும் பெறுவதற்கு மிருக வளர்ப்பு இன்றியமையாததாகும்.

தமிழீழ மக்கள் ஒவ்வொரு வீட்டிலும் கோழி, ஆடு, மாடு, முயல், பன்றி போன்றவற்றை அவரவர் வசதிக்கேற்றவாறு வளர்த்தல் வேண்டும். இதனை ஒவ்வொருவரும் தமது கடமை



யாக உணர்தல் வேண்டும். வீட்டில் எஞ்சும் உணவுகளைப் போட்டு வளர்க்கும் மிருகங்கள் எமக்கு மிகுந்த பயன்பாட்டைத் தரும். விவசாயப் பண்ணைகள் அமைக்கப்பட்டு, அவற்றினூடாகவும் மிருக வளர்ப்பை ஊக்குவிக்கலாம்.

எமது பிரதேசங்களில் பரந்து காணப்படும் சிறுசிறு கடலோரக்குடா, குளங்கள், குட்டைகளில் நன்னீர் மீன், இறால் போன்றவற்றை வளர்க்கலாம். கடல் தடைச் சட்டங்களால் மீன்பிடி பாதிக்கப்படும் போது தேவையான மீன் உணவைப் பெறுவதற்கு இம்முறை சிறந்ததாகும். நாம் செயற்கையாகத் தயாரிக்கும் தடாகங்களிலும் மீன்வளர்ப்பு, இறால் வளர்ப்பு சாத்தியமானதாகும்.

## III கைத்தொழில்

எமது தேவைகளிற்கு அந்நிய நாடுகளில் (சிறிலங்கா உட்பட) தங்கியிருப்பதிலிருந்து விடுபட்டுக் கொள்ளவும், தமிழீழத்திலிருந்து மக்கள் வெளியேறுவதைக் குறைப்பதற்கும் சில கைத்தொழில்களை ஆரம்பிப்பது அவசியமாகிறது. போராட்டம் வளர்ச்சியடைந்து செல்லும் போது ஒரு நிலையில் எமது நாட்டினுள் இறக்குமதியாகும் பொருட்கள் யாவும் எதிரியால் திட்டமிட்டுத் தடுக்கப்படலாம். அந்நிலையை நாம் முதலே எதிர்பார்த்து அதனை சமாளிக்கக் கூடிய வகையில் கைத்தொழிற் திட்டங்களை ஆரம்பித்தல் வேண்டும்.

கைத்தொழிற் துறையினது விருத்திக்கான ஒரு மாதிரித் திட்டத்தை முன் வைக்கும் போது நாம் பின்வரும் நான்கு நோக்கங்களை அடிப்படையாகக் கொள்ளல் வேண்டும்.

1. தமிழீழத்திற்குள் இறக்குமதியாகும் பொருட்களுக்கு மாற்றீடாகப் பயன்படுத்தக் கூடிய பொருட்களை உற்பத்தி செய்தல். உதாரணமாக சவர்க்காரம்,

https://tamileelamarchive.com/



புடவை, சோடா, பால்மா, உணவு வகை, பிளாஸ்ரிக் பொருட்கள், பாதணிகள், சைக்கிள் உதிரிப்பாகங்கள், பேனா முதலியவை.

2. எமது மக்களிற்கான வேலை வாய்ப்பை வழங்கக் கூடியதும், எமது விவசாய உற்பத்திப் பொருட்களை உள்ளீடாகப் பயன்படுத்தக் கூடியதுமான கைத் தொழில்களை ஆரம்பித்தல். உதாரணமாக தும்பு, சாயம், எண்ணெய், ஜாம், பழரசம், உணவு பதனிடல், விலங்குணவு தயாரித்தல் போன்றவை.

3. எமது பிரதேசத்தில் காணப்படும் வளங்களைப் பயன் படுத்தக் கூடிய கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தக் கூடிய கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்படுதல் உதாரணமாக பனையின் பயன்பாடுகள், கடதாசி, கண்ணாடி, இல்மனைற் போன்றவை.

4. மீன்பிடித் துறை சார்ந்த கைத்தொழிலை விருத்தி செய்தல். உதாரணமாக கருவாடு ஆக்குதல், தகரத் திலடைத்தல், தனிநீட்டுதல், கோழியுணவு தயாரித்தல் போன்றவை.

எமக்குக் கிடைக்கக் கூடிய வளங்களில் பெரும் பகுதி கடல் பரப்பிலேயே உள்ளது: அவ்வளம் முழுவதையும் பயன் படுத்துவதற்கான திட்டங்களை இன்று முழுமையாக வரையறை செய்ய முடியாதிருந்தாலும் கடலுணவு உற்பத்தியிலும் கடல் வளம் சார்ந்த கைத்தொழில் உற்பத்தியிலும் கவனம் செலுத்த வேண்டியது முக்கியமானதொன்றாகும்.

மனிதன் வாழ்வதற்கு முக்கிய தேவை உணவாக இருப்பதால் உணவு பதனிடும் கைத்தொழிலில் நாம் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். கத்தரி, முருங்கை, தக்காளி போன்ற மரக்கறிகள், மரவள்ளி, காரட், பீற்றூட் போன்ற கிழங்கு வகைகள், மா, பலா, வினாத்தி போன்ற பழவகைகள்



முதலியன சில காலங்களில் மிதமிஞ்சிக் கிடைக்கும். ஏனைய காலங்களில் அரிதாகவே இருக்கும். இவை ஏராளமாகக் கிடைக்கும். காலங்களில் அவற்றைப் பதனிட்டுப் பாதுகாத்து வைப்பதன் மூலம் ஏனைய காலங்களில் பயன்படுத்தலாம். மற்றும் அவற்றை வெவ்வேறு வகையான சுவையுள்ள உணவு களாக மாற்றுவதன் மூலமும் பயன்படுத்தலாம். இதன் மூலம் அவற்றின் விலையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளையும் சமநிலைப் படுத்த முடியும்.

இன்றைய நிலையில் சிறு கைத்தொழில், குடிசை கைத் தொழில் என்பனவற்றையே ஆரம்பித்தல் சாத்தியமானதாகும். பாரிய கைத்தொழில்களை நாம் உடனடியாக ஆரம்பிக்கக் கூடிய சூழ்நிலைகள் இல்லாதிருப்பினும் அவற்றைப் பற்றிய திட்டங்களை இயலுமானவரை தயாரித்து வைத்திருப்போமாயின் விடுதலையின் பின்னர் பொருளாதார அபிவிருத்தியும் திட்டமிடலும் இலகுவாக இருக்கும்.

## IV சக்தி

எமது பாவனையிலுள்ள மின்சாரம், பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், எரிவாயு, போன்றசக்திகள் அனைத்துமே தமிழீழத்திற்கு வெளியிலிருந்து இறக்குமதியாகின்றன. விறகு தமிழீழத்தின் சில பகுதிகளில் கிடைக்கக்கூடியதாக இருப்பினும் போக்குவரத்து தடை படும் போது தமிழீழத்தின் ஏனைய பகுதிகள் விறகுத் தட்டுப்பாட்டால் பாதிப்படையும்.

சக்தி தடைபடுவதால் பாதிப்படையக்கூடிய அத்தியாவசிய துறைகளாக நாம் பின்வரும் ஐந்து துறைகளைக் கருதலாம்.

1. வைத்திய சாலைகளில் சிகிச்சைக்குத் தேவையான மின் மற்றும் ஒளி.

2. சமையல் வேலையில் எரிபொருள்

https://tamileelamarchive.com/



3. விவசாயத்தில் நீர்ப்பாசனம்
4. கைத்தொழில்களில் மின், எரிபொருள்
5. போக்கு வரத்து

எம்மிடமுள்ள வளங்களைப் பயன்படுத்தி சில பதிலீடுகளை இப்போதே அறிமுகப்படுத்தி அவற்றிற்கு எம்மைப் பழக்கப் படுத்திக் கொள்ளுதல் சிறந்ததாகும். நாம் சிரமமின்றிப் பெறக் கூடிய சக்திகள் வருமாறு

### 1. சூரியசக்தி

வருடத்தில் 75 வீதத்திற்கும் மேற்பட்ட நாட்கள் தமிழீழப்பகுதியில் சூரிய ஒளி தேவையான அளவு இலவசமாகக் கிடைக்கிறது. இதனை நாம் சிறந்த முறையில் பயன்படுத்துதல் அவசியமானதாகும்.

வீட்டில் சமைப்பதற்கும், நோயாளிகளிற்கு சுடு நீர் தயாரிப்பதற்கும் சூரிய சக்தியைப் பயன்படுத்து வது மிகவும் இலகுவானதாகும். சூரிய சக்தியிலிருந்து மின்சாரத்தைப் பெறுவது சாத்தியமானதாக இருப் பினும் அதற்கான கருவிகள் பெரிய தொழில் நுட்பங் களிற்குட்பட்டு இருப்பதால் இன்றைய நிலையில் இத்தகைய கருவிகளை நாம் தயாரிப்பது கடினமான தாகும். இருப்பினும் வைத்திய சாலை அத்தியாவசிய தேவைகளிற்காக ஒரு சில கருவிகளை பிற நாடுகளி லிருந்து வாங்கி வைத்துக்கொள்ள முடியும். நீர்ப்பாச னத்திற்குக் கூட இந்தியா, இஸ்ரேல் போன்ற நாடு களில் சூரிய சக்தியைப் பயன்படுத்துகிறார்கள்.

### 2. காற்றுசக்தி

முக்கியமாக நீர்ப்பாசனத்திற்கு காற்றாடி இயந் திரங்கள் தமிழீழத்தின் சில பகுதிகளில் பயன்படுத்தப் படுகிறது. இதனை அமைப்பதற்கான ஆரம்பச் செலவு



சற்று அதிகமாக இருப்பினும் பின்னர் இது இலவச மாகவே நீரை இறைக்கிறது. இத்தகைய காற்றாடிகள் தமிழீழத்தின் பல பகுதிகளிற்கும் விஸ்தரிக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு விவசாயியும் தனித்தனியாகப் பொருத்துவதிலும் பார்க்க சிலபேர் சேர்ந்து அவர் களின் மொத்த நிலப்பரப்பிற்கும் நீர்ப்பாய்ச்சத்தக்க வலுவுள்ள காற்றாடியை கூட்டுறவு அடிப்படையில் பொருத்துதல் வசதியாக இருக்கும். காற்று சக்தியிலி ருந்தும் மின்சாரம் தயாரிக்க முடியும்.

### 3. உயிரினவாயு (Biogas)

மாட்டுச் சாணம் மற்றும் கழிவுப் பொருட்களி லிருந்து உற்பத்தியாக்கப்படும் உயிரினவாயு சமை யிற்கும், வெளிச்சத்தை ஏற்படுத்துவதற்கும் இலகு வாகப் பயன்படுத்தப்படலாம். வீடுகளில் கால்நடை வளர்ப்பவர்கள் அனைவரும் கழிவுகளை இவ்வாறு பயன்படுத்திக் கொள்ளுதல் மிகச் சிறந்ததாகும் நேரடியாகப் பசளையாகப் பயன்படுத்தப்படும் மாட்டுச் சாணத்தை விட உயிரினவாயு பிரிக்கப்பட்டபின் எஞ்சுகின்ற சாணம் சிறந்த பசளை என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இரண்டு மாடுகளும் அதன் கன்று களையும் வளர்க்கும் ஒரு வீட்டுக்காரர் ஏனைய எல்லாக் கழிவுகளையும் பாவிப்பாரானால் அவர்களின் சமை யலிற்கு வேறு எரிபொருள் எதனையும் நம்பியிருக்கத் தேவையிராது. பெருந்தொகையாக கால் நடை வளர்க்கும் ஒவ்வொருவரும் உயிரினவாயுவைப் பயன் படுத்துதல் சிறந்ததாகும்.

## V தொழில் நுட்பம்

எமது நிலைமைகளிற்கேற்றவாறு கைத்தொழில் விவ சாயத்துறைகளில் ஏற்ற தொழில் நுட்பங்களைப் புகுத்துவதன் மூலம் சிறந்த பயனை அடையலாம். எமது உற்பத்திகளை இலகு

https://tamileelamarchive.com/



வாக்கவும் உற்பத்தியின்னளவை அதிகரிக்கவும் புதிய தொழில்நுட்பங்கள் அவசியமாகும்

விவசாயத்தில் தற்போது நீர்ப்பாசனம் இறக்குமதி செய்யப்படும் மின்சாரம், டீசல், மண்ணெண்ணெய் போன்றவற்றிலேயே தங்கியுள்ளது. நாம் கைப்பம்புகள் (Hand pumps), காற்றாடி (Windmill) போன்ற சாதனங்களை இலகுவான முறையில் மாற்றியமைத்து அறிமுகம் செய்வதன் மூலம் அந்நிய நாட்டில் தங்கியிருப்பதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

இவ்வாறாக தமிழ்ப்பிரதேசம் சார்ந்த சுயசார்புப் பொருளாதாரத் திட்டத்தில் பல அம்சங்களை மேலும் மேலும் சேர்த்துக்கொள்ளலாம். மேலே குறிப்பிட்டவை ஒரு நெருக்கடி காலத்தை முக்கியமாகக் கருதி அமைக்கப்பட்ட ஓர் மாதிரித் திட்டம் என்ற அடிப்படையில் அதன் எல்லைகள் மிகக் குறுகியதாகவே உள்ளன. நடைமுறையில் அனுபவங்களினூடாக, மேலும் பல புதிய விஷயங்கள் சேர்த்துக் கொள்ளப்படும்.

இறுதியாக நாம் மேலே குறிப்பிட்ட திட்டமிட்ட உற்பத்திகள் பங்கீடு செய்யப்படும்போது அவை சகலருக்கும் கிடைப்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். தேவைக்கேற்ற அளவை நியாய விலையில் விற்பனை செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டாலேயே உற்பத்தியாளரும் நுகர்வோரும் திருப்தி அடைவர். இவ்வாறான பங்கீட்டு ஒழுங்குகளை மேற்கொள்வதற்கு கூட்டுறவு முறையிலான கொள்வனவும் விற்பனையும் இன்றைய பொருளாதார அமைப்பில் இருந்து செயற்படப் பொருத்தமானதாக இருக்கும். உற்பத்தியாளரின் உற்பத்திப் பொருட்கள் அஞ்சல் வினியோக முறைபோல் ஒழுங்குபடுத்தப்படுவதனால் வீண்விரயமோ பற்றாக்குறையோ ஏற்படமாட்டாது.

☼